FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348050

1. District : Dharmapuri PS: VSAC Year: 2026 FIR No.: 4/AC/2026 Date: 18.07.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 17.07.2026 Prior to 17.00hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 17.07.2026 Time : 22.45 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 15 H 992598 Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Suo Moto
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் O/o the Tahsildar, Nallampalli, Dharmapuri District about 12 km South East
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : M. NAGARAJAN (b) Father's/ Husband's Name : Tr. T.A. MARIAPPAN
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 5F/2026 (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Deputy Supdt. of Police தொழில் (g) Address : O/o the Deputy Superintendent of Police, Vigilance and Anti-Corruption, Dharmapuri.
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Tr. T. Prasannamurthy, age 49/2026, S/o. Lakshmipathy, Tahsildar, Nallampalli, Dharmapuri District.
2) Selvi. C. Subhashini, age 46/2026, D/o. Chinnadurai, Senior Revenue Inspector, O/o the Tahsildar, Nallampalli, Dharmapuri District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு -

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் -

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet is enclosed herewith.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Suo moto

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

M. N

Name: பெயர் M. NAGARAJAN, 18/07/24
Rank: நிலை Deputy Superintendent of Police
Vigilance and Anti-Corruption,
Dharmapuri.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

20.07.2026 at 11.30hrs

தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.4/AC/2026, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12–ன் தொடர்ச்சி.

தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் M.நாகராஜன் ஆகிய நான் 17.07.2026-ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 17.00 மணிமுதல் இரவு 23.45 மணிவரையில் தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டாட்சியர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின்போது கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையிலும், உத்தரவு கிடைக்கப்பெற்றதின் பேரிலும் 18.07.2026-ம் தேதி காலை 11.30 மணிக்கு, தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் பிரிவு கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.4/AC/2026, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 –ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் விபரம் பின்வருமாறு.

*** *** ***

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டாட்சியர் அலுவலகத்தில் பட்டா மாறுதல் உத்தரவு, சாதி சான்றிதழ், வருமான சான்றிதழ், வாரிசு சான்றிதழ், இருப்பிட சான்றிதழ், சிறு விவசாயி சான்றிதழ், விதவை சான்றிதழ், கட்டிடஉரிமம், நகைஅடகு கடை உரிமம், ஆகியவற்றை வழங்குவதற்கு பொதுமக்களிடமிருந்து நேரடியாகவும், கூகுள்பே, போன்பே மற்றும் புரோக்கர்கள் மூலமாகவும் கையூட்டு பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில், இன்று 17.07.2026–ம் தேதி 15.00 மணிக்கு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் அவரது அலுவலக தொலைபேசியில் இருந்து அரசு சாட்சிகளை அனுப்புமாறு சம்மந்தப்பட்ட அரசு உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன் பேரில், மேற்படி அரசு சாட்சிகளான திரு.S.செந்தில்குமார், கண்காணிப்பாளர், உதவி இயக்குநர் அலுவலகம், கூட்டுறவு தணிக்கை, தருமபுரி மற்றும் திரு.P.இளங்குமரன், உதவியாளர், கோட்டபொறியாளர் அலுவலகம், நெடுஞ்சாலை (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு), தருமபுரி ஆகியோர் 16.20 மணிக்கு தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் வந்து அறிக்கை செய்தனர். பின்னர்

மேற்படி அரசு சாட்சிகள் மற்றும் காவலர்கள் குழுவுடன் 16.30 மணிக்கு அரசு வாகனம் TN 21 G 0635 என்ற நான்குசக்கர வாகனத்திலும், TN 22 G 1039 என்ற இரண்டுசக்கர வாகனத்திலும் தருமபுரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திலிருந்து புறப்பட்டு, தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு 17.00 மணிக்கு திடீர் சோதனை செய்ய சென்றோம். அந்த அலுவலகத்திற்கு உள்ளே நுழைந்தபோது வட்டாட்சியர் இருக்கையில் ஒருவரும், அவருக்கு முன்பு இரண்டு நாற்காலிகளில் இரண்டு நபர்களும் அமர்ந்திருந்தனர். வட்டாட்சியர் இருக்கையில் அமர்ந்திருந்த நபரிடம் என்னையும், என்னுடன் வந்த அரசு சாட்சிகள் மற்றும் காவலர் குழுவினரை அறிமுகம் செய்துக் கொண்டு, திடீர் சோதனை மேற்கொள்ள வந்த விவரத்தை தெரிவித்து அவர் குறித்து விசாரித்தபோது, தனது பெயர் ஜார்ஜ் என்றும், தான் தருமபுரி வருவாய் கோட்டாட்சியராக பணிபுரிந்து வருவதாகவும், 17.07.2026–ம் தேதி நல்லம்பள்ளி வட்டாட்சியர் அவர்களால் அதியமான்கோட்டை காவல் ஆய்வாளர், NHAI நிறுவன துணை பொதுமேலாளர், ஒப்பந்ததாரர் மற்றும் பொதுமக்களுக்கு ந.க.எண்.01/2026/அ1, நாள்.15.07.2026–ன்படி வழங்கப்பட்ட அழைப்பாணையின் பேரில் சேலம் – கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் ஏலகிரியான் கொட்டாய் முண்டாசு புறவடை சந்திப்பில் NHAI நிறுவனம் மூலம் சிறுபாலம் அமைத்துதர வேண்டி ஊர் பொதுமக்கள் சார்பாக சாலைமறியல் போராட்டம் குறித்து அமைதி பேச்சுவார்த்தை நடத்தி முடித்து வட்டாட்சியர் அறையில் அலுவல் சம்மந்தமாக பேசிக் கொண்டிருப்பதாக தெரிவித்தார். பிறகு வருவாய் கோட்டாட்சியருக்கு எதிரே அமர்ந்திருந்த இரண்டு நபர்கள் குறித்து அவர்களிடம் விசாரிக்க, அதில் ஒருவர் தனது பெயர் இல.பிரசன்னமூர்த்தி என்றும், தான் நல்லம்பள்ளி வட்டாட்சியராக 25.06.2025 முதல் பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். மற்றொருவர் தனது பெயர் திருமதி.கற்பகவள்ளி என்றும், தான் நல்லம்பள்ளி சமூகபாதுகாப்பு திட்ட தனி வட்டாட்சியராக 25.04.2025 முதல் பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். பிறகு நான் வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம், நல்லம்பள்ளி வட்டாட்சியர் அலுவலகத்தை திடீர் சோதனை செய்வதற்கு வட்டாட்சியர் அவர்களை ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொண்டேன். அதன் பிறகு அரசு சாட்சிகள் முன்னிலையில் வட்டாட்சியர்

அலுவலகத்தை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது நான், வட்டாட்சியர் திரு.இல.பிரசன்னமூர்த்தி அவர்களிடம் நல்லம்பள்ளி வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் குறித்து அரசு சாட்சிகள் முன்னிலையில் விசாரித்தேன். அதற்கு அவர் நல்லம்பள்ளி வட்டாட்சியர் அலுவலகத்தில், தனக்கு கீழ் மண்டல துணை வட்டாட்சியர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர்கள், வருவாய் உதவியாளர்கள், வட்ட சார் ஆய்வாளர் நில அளவை, ஆகியோர்கள் பணிபுரிந்து வருவதாகவும், மேலும் நல்லம்பள்ளி வட்டாட்சியர் அலுவலகத்தின் முதல் தளத்தில் இயங்கி வரும் வட்ட வழங்கல் அலுவலகம் துணை வட்டாட்சியர் திரு.மணி அவர்களின் தலைமையிலும், தேர்தல் பிரிவு துணை வட்டாட்சியர் திருமதி.மாலா அவர்களின் தலைமையிலும் இயங்கி வருவதாகவும், அவர்கள் இருவரும் அன்று விடுமுறையில் இருப்பதாகவும் தெரிவித்தார். மேலும், சமூகபாதுகாப்பு திட்ட அலுவலகம் தனி வட்டாட்சியர் திருமதி.கற்பகவள்ளி அவர்கள் தலைமையில் தரைத்தளத்தில் இயங்கி வருவதாகவும் தெரிவித்தார். மேலும், நில அளவை பிரிவு வட்ட துணை ஆய்வாளராக திரு.ஜாகீர் உசேன் அவர்கள் பணிபுரிந்து வருவதாகவும், அவர் தற்போது சென்னை அரசு அண்ணா இன்ஸ்யூட்டில் நிலஅளவை சம்மந்தமான பயிற்சியில் இருப்பதாகவும் தெரிவித்தார். பின்னர் நான் அந்த அலுவலகத்தின் தரைத்தளம் மற்றும் முதல்தளத்தில் அலுவலில் இருந்த அலுவலர்கள் மற்றும் தனிநபர்கள் ஆகியோர்களை வட்டாட்சியர் அலுவலகத்தின் தரைத்தளத்தின் மைய பகுதியில் அமைந்துள்ள அறைக்கு அரசு சாட்சிகள் மற்றும் காவலர் குழுவினர் உதவியுடன் அழைந்து வந்தேன். அப்போது, தருமபுரி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு ஏற்கனவே தகவல் தெரிவித்ததின் பேரில், அதியமான்கோட்டை காவல் நிலைய பெண் தலைமை காவலர்கள் 425 திருமதி.எம்.பத்மா மற்றும் 528 திருமதி.எம்.கன்னியாகுமரி ஆகியோர் திடீர் சோதனைக்கு உதவியாக இருக்கும் பொருட்டு 17.45 மணிக்கு வட்டாட்சியர் அலுவலகம் வந்து என்னிடம் அறிக்கை செய்தனர். பின்னர் நான், அனைவரிடமும் திடீர் சோதனை செய்ய வந்திருக்கும் விவரத்தை தெரிவித்து, அரசு சாட்சிகள் முன்னிலையில் அவர்கள் வசம் வைத்திருக்கும் பணம் குறித்து விசாரித்து பணத்தை எடுத்து ஆஜர் செய்யுமாறு கேட்டுக் கொண்டேன். அதன்படி, அந்த அறையில் இருந்த 28 அலுவலர்கள் மற்றும் 4 தனிநபர்கள் மொத்தம் 32 நபர்கள்

அவரவர்கள் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார்கள். அதில் நல்லம்பள்ளி வட்டாட்சியர் திரு.இல.பிரசன்னமூர்த்தி அவர்கள் அவரது மணிபர்சில் இருந்து ரூ.1500/–ம் எடுத்து ஆஜர் செய்து, அந்த பணம் தனது சொந்த பணம் என்றும், செலவிற்கு வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். அவர் அளித்த விளக்கம் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் நம்பத்தகுந்தவாறு இருந்ததால், அந்த பணத்தை அரசு சாட்சிகள் முன்னிலையில் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் அவர் தனது பேன்டின் வலதுப்புற பாக்கெட்டில் இருந்து ரூ.13,000/– எடுத்து ஆஜர் செய்து, அந்த பணம் சென்செஸ் பயிற்சி பெறுபவர்களுக்கு டீ, காபி மற்றும் சாப்பாட்டு செலவிற்காக வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் இல்லாததாலும், அந்த பணம் அரசு பணி செய்வதற்கு பொதுமக்களிடமிருந்து கையூட்டாக கேட்டு பெற்றிருக்ககூடும் என்று நம்புவதற்கு போதுமான முகாந்திரம் இருந்ததால், அந்த பணம் ரூ.13,000/–த்தை அரசு சாட்சிகள் முன்னிலையில், வழக்கின் நிமித்தம் கைப்பற்றினேன். பின்னர் வட்டாட்சியர் தவிர மற்ற 27 அரசு அலுவலர்கள் மற்றும் 4 தனிநபர்கள் ஆகியோர்கள் வைத்திருந்த பணம் குறித்த அவர்களது விளக்கம் ஏற்றுக் கொள்ளதக்க வகையில் நம்பத்தகுந்தவாறு இருந்ததால், அந்த பணத்தை அரசு சாட்சிகள் முன்னிலையில் அவரவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர் அந்த 28 அரசு அலுவலர்கள் மற்றும் 4 தனிநபர்கள் ஆகியோர்களின் கைப்பேசியை அரசு சாட்சிகள் முன்னிலையில் பெற்று கூகுள்பே மற்றும் போன்பே செயலிகளை ஆய்வு செய்ததில், நல்லம்பள்ளி வட்டாட்சியர் திரு.இல.பிரசன்னமூர்த்தி அவர்களின் வங்கி கணக்கில் வங்கி இருப்பாக ரூ.1,14,845.23 இருந்தது. அது குறித்து அவரிடம் விளக்கம் கேட்க, அதற்கு அவர் அந்த பணம் தான் சம்பளம் பெறும் தருமபுரி SBI மெயின் பிரான்ச் வங்கியில் பராமரித்து வரும் அவரது வங்கி கணக்கு எண். 11228792994–ல் உள்ள அவரது சம்பள பணம் என்று தெரிவித்தார். மேலும் மீதம் உள்ள 26 அரசு அலுவலர்கள் மற்றும் 4 தனிநபர்கள் ஆகியோர்களது கூகுள்பே மற்றும் போன்பே ஆய்வு செய்ததில் சந்தேகத்திற்கிடமான பணபரிவர்த்தனையோ அல்லது அதிகப்படியான வங்கியிருப்போ தென்படவில்லை. பின்னர் அவரவர்களின் கைப்பேசியை அவரவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர் நல்லம்பள்ளி வட்டாட்சியர்

அலுவலகத்தில் பணிபுரியும் முதுநிலை வருவாய் ஆய்வாளர், செல்வி.C.சுபாஷினி அவர்களின் கூகுள்பே செயலியை ஆய்வு செய்ததில் அவரது வங்கி இருப்பு ரூ.25,68,803/– (ரூபாய் இருபத்தைந்து இலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து எண்ணூற்று மூன்று மட்டும்) என இருந்தது. அது குறித்து அவரிடம் விளக்கம் கேட்க, அந்த பணம் தான் சம்பளம் பெறும் பாலக்கோடு SBI பிரான்ச் வங்கியில் பராமரித்து வரும் அவரது வங்கி கணக்கு எண்.30369010030–ல் உள்ள அவரது சம்பள பணம் என்றும், தான் தனியாக வசித்து வருவதால், தனது எதிர்கால செலவிற்கு சேமித்து வருவதாகவும் தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் இல்லாததாலும், அவரது வங்கி கணக்கில் சந்தேகத்திற்கிடமான பல பணபரிவர்த்தனைகள் நடைபெற்று இருந்த காரணத்தாலும், அந்த பணம் அரசு பணி செய்ய பொதுமக்களிடமிருந்து கையூட்டாக பெற்றிருக்ககூடும் என்று நம்புவதற்கு போதிய முகாந்திரம் இருந்தது. பின்னர் அலுவலகத்திற்கு வெளியில் இருந்த அலுவலர்களது இருசக்கர வாகனங்களை அரசு சாட்சிகள் மற்றும் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் முன்னிலையில் சோதனை செய்தேன். சோதனையில் பணமோ பொருளோ கைப்பற்றப்படவில்லை. பின்னர் நான், வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வடகிழக்கே சுமார் 50 மீட்டர் தொலைவில் புளியமரத்திற்கு அடியில் நிறுத்தப்பட்டிருந்த வட்டாட்சியரின் அரசு ஜீப் பதிவு எண்.TN 29 G 0799 சாம்பல் நிற பொலிரோ வாகனத்தை வட்டாட்சியர், அவரது ஓட்டுநர் திரு.நாகப்பன் மற்றும் அரசு சாட்சிகள் முன்னிலையில் சோதனை செய்தேன். அந்த சோதனையின்போது அந்த வாகனத்தின் ஓட்டுநர் இருக்கைக்கு பின்புறம் அமைந்துள்ள மூன்று நபர்கள் அமரக்கூடிய இருக்கையின் நடுவில் Leviya, NATIONAL HIGHWAYS AUTHORITY OF INDIA (Ministry of Road, Transport and Highways, Government of India) REGIONAL OFFICE, CHENNAI என்று அச்சிடப்பட்ட கருப்புநிற மூன்று அறைகள் கொண்ட அலுவலக பை இருந்தது. அந்த பையின் நடு அறையில் ஒரு லேப்டாப் இருந்தது. அந்த பையின் முன்அறையில் இரண்டு வெளிர் காக்கி கவர்களும், 500 ரூபாய் தாள்கள் கற்றையாகவும் இருந்தது. அந்த 500 ரூபாய் தாள்களை அரசு சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப் பார்க்கையில் 30 எண்ணிக்கையில் மொத்தம் ரூ.15,000/–ம் இருந்தது. மேலும்,

அந்த இரண்டு காக்கி கவர்களை திறந்து பார்த்தபோது 500 ரூபாய் தாள்கள் கற்றையாகவும் இருந்தது. ஒரு கவரில் இருந்த 500 ரூபாய் தாள்களை அரசு சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப் பார்க்கையில் 40 எண்ணிக்கையில் மொத்தம் ரூ.20,000/– மும், மற்றொரு கவரில் இருந்த 500 ரூபாய் தாள்களை அரசு சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப் பார்க்கையில் 8 எண்ணிக்கையில் மொத்தம் ரூ.4000/–ம் என ஆக மொத்தம் ரூ.39,000/–ம் இருந்தது. அந்த பணம் குறித்து வட்டாட்சியர் திரு.இல.பிரசன்னமூர்த்தி அவர்களிடம் நான் விளக்கம் கேட்டேன். அதற்கு அவர் அந்த பணமும் சென்செஸ் பயிற்சி பெறுபவர்களுக்கு டீ, காபி மற்றும் சாப்பாடு செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்தார். அவாது விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லாததாலும், அந்த பணம் அரசு பணி செய்வதற்கு பொதுமக்களிடமிருந்து கையூட்டாக கேட்டு பெற்றிருக்ககூடும் என்று நம்புவதற்கு போதுமான முகாந்திரம் இருந்ததால் அந்த பையில் இருந்த வட்டாட்சியரின் லேப்டாப்பை அவரிடமே சாட்சிகள் முன்னிலையில் ஒப்படைத்து பின் அதில் இருந்த கணக்கில் வராதபணம் ரூ.39,000/–த்தையும், அந்த பணம் வைக்கப்பட்டிருந்த கருப்புநிற பையையும் அரசு சாட்சிகள் முன்னிலையில் வழக்கின் நிமித்தம் கைப்பற்றினேன். பின்னர் அரசு சாட்சிகள் முன்னிலையில் வட்டாட்சியர் அறை, அனைத்து அலுவலர்களின் அறைகள், இருக்கைகள் மற்றும் பதிவறை ஆகியவற்றை முழுவதுமாக காவல் குழுவினர் உதவியுடன் சோதனை செய்தேன். அந்த சோதனையில் பணமோ சந்தேகத்திற்குரிய பொருட்களோ கைப்பற்றபடவில்லை. பின்னர் இந்த திடீர் தணிக்கையின் போது, நான் கேட்டுக் கொண்டதற்கிணங்க, வட்டாட்சியர் திரு.இல.பிரசன்னமூர்த்தி அவர்கள் 30 நாட்களுக்கு மேல் நிலுவையில் உள்ள உட்பிரிவுடன் கூடிய பட்டா மாறுதல் விண்ணப்பங்களின் விவரம் மற்றும் 15 நாட்களுக்கு மேல் நிலுவையில் உள்ள உட்பிரிவு அல்லாத பட்டா மாறுதல் விண்ணப்பங்களின் விவரம் ஆகியவற்றை சம்மந்தப்பட்ட அலுவலர்களின் உதவியுடன் கணினியில் இருந்து பதிவிறக்கம் செய்து, அவைகளில் வட்டாட்சியர் மற்றும் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் ஆகியோர்கள் சான்றொப்பம் செய்து ஆஜர் செய்தார்கள். அந்த ஆவணங்களை நான் வழக்கின் நிமித்தம் மகஜரில் கைப்பற்றினேன். பின்னர் நான், கேட்டுக் கொண்டதற்கிணங்க, முதுநிலை வருவாய்

ஆய்வாளர் செல்வி.சுபாஷினி அவர்கள் அவரது தன்பதிவேட்டை ஆஜர் செய்தார். அந்த பதிவேட்டை பார்வையிட்டபோது கடந்த 15.05.2026 முதல் 17.07.2026 வரை அவர் எவ்வித பதிவுகளும் மேற்கொள்ளாமல் பணியில் மெத்தனமாக இருப்பது கண்டறியப்பட்டது. அந்த பதிவேட்டை பார்வையிட்டதற்கு அடையாளமாக அதில் நானும், அரசு சாட்சிகளும் கையொப்பம் செய்தோம். பின்னர் அந்த பதிவேட்டின் சம்மந்தப்பட்ட பக்கங்களை ஒளிநகல் எடுத்து சான்றொப்பம் செய்து வட்டாட்சியர் ஆஜர் செய்ததை நான் மகஜரில் வழக்கின் நிமித்தம் கைப்பற்றினேன். பின்னர், வட்டாட்சியர் அலுவலகத்தில் தனிநபர் கையிருப்பு பணபதிவேடு குறித்து வட்டாட்சியர் திரு.இல.பிரசன்னமூர்த்தி அவர்களிடம் கேட்டேன். அதற்கு அவர் இதுவரை தனிநபர் கையிருப்பு பணபதிவேடு அலுவலகத்தில் பராமரிக்கப்படவில்லை என்று தெரிவித்தார். பின்னர் நல்லம்பள்ளி வட்டாட்சியர் திரு.இல.பிரசன்னமூர்த்தி மற்றும் முதுநிலை வருவாய் ஆய்வாளர் செல்வி.C.சுபாஷினி ஆகியோர்களை அரசு சாட்சிகள் திரு.S.செந்தில்குமார் மற்றும் திரு.P.இளங்குமரன் ஆகியோர் முன்னிலையில் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த திடீர் சோதனை குறித்து 17.07.2026–ம் தேதி மாலை 19.00 மணி முதல் இரவு 23.45 மணிவரை செயல்முறை நடவடிக்கைகள் என்னால் தயார் செய்யப்பட்டது. இந்த திடீர் சோதனையில், தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டாட்சியராக பணிபுரியும் திரு.இல.பிரசன்னமூர்த்தி அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.52,000/–ம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவரால் திருப்திகரமான விளக்கம் தர இயலவில்லை. மேற்படி திடீர் சோதனையின் செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் ஆவணங்களை பரிசீலித்ததில் இருந்து, ஏற்கனவே எனக்கு கிடைத்த தகவல்படி, கைப்பற்றப்பட்ட பணமானது வட்டாட்சியர் திரு.இல.பிரசன்னமூர்த்தி அவர்கள் பட்டா மாறுதல் உத்தரவு, சாதி சான்றிதழ், வருமான சான்றிதழ், வாரிசு சான்றிதழ், இருப்பிட சான்றிதழ், சிறு விவசாயி சான்றிதழ், விதவை சான்றிதழ், கட்டிட உரிமம், நகைஅடகு கடை உரிமம், ஆகியவற்றை வழங்குவதற்கு தனது பதவியை துஷ்பிரயோகம் செய்து பொதுமக்களிடமிருந்து நேரடியாகவும், கூகுள்பே, போன்பே மற்றும் புரோக்கர்கள் மூலமாகவும் கையூட்டாக பெற்றிருக்ககூடும் என்பதற்கான போதுமான முகாந்திரம் இருப்பதாக அறியப்பட்டதாலும், மேலும் முதுநிலை வருவாய் ஆய்வாளர்

செல்வி.சி.சுபாஷினி அவர்கள் அவரது சம்பள கணக்கை பராமரித்துவரும் பாலக்கோடு SBI வங்கியில் வங்கி இருப்பு ரூ.25,68,803/–ம் இருப்பது குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவரால் திருப்திகரமான விளக்கம் தர இயலாத காரணத்தாலும், அவரது வங்கி கணக்கில் சந்தேகத்திற்கிடமான பல பணபரிவர்த்தனைகள் நடைபெற்று இருந்த காரணத்தாலும், அவர் தனது பதவியை துஷ்பிரயோகம் செய்து பொதுமக்களிடமிருந்து நேரடியாகவும், கூகுள்பே, போன்பே மற்றும் புரோக்கர்கள் மூலமாகவும் கையூட்டாக பெற்றிருக்ககூடும் என்பதற்கான போதுமான முகாந்திரம் இருப்பதாக அறியப்பட்டதாலும். சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குர் அலுவலக உத்தரவுப்படி எதிரி 1) திரு.ட.பிரசன்னமூர்த்தி, வயது 49/2026, த/பெ.இலட்சுமிபதி, வட்டாட்சியர், நல்லம்பள்ளி, தருமபுரி மாவட்டம் மற்றும் எதிரி 2) செல்வி.C.சுபாஷினி, வயது 46/2026, த/பெ.சின்னதுரை, முதுநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், நல்லம்பள்ளி, தருமபுரி மாவட்டம் ஆகியோர்கள் மீது தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.4/AC/2026, u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேலும் முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் திடீர் சோதனையின்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கைகளின் அசல் மற்றும் எதிரிகளின் வாக்குமூலங்கள் அசல் ஆகியவற்றை மாண்புமிகு தருமபுரி மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் மேல் நடவடிக்கைக்காக அனுப்பிவைக்கப்பட்டது.

(M.நாகராஜன்)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
தருமபுரி.